**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 61/2013 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW.1 |
| | Defence |
| | Court |
| Name | Chandran |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 31st day of October 2025.

Signature of Witness

Name of the INterpreter: Tmt. Mohana, Gr.III, Bench Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the th day of October 2025.

Signature of Interpreter

முதல் விசாரணை

நான் காஞ்சிபுரம் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.11.2011 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன் . நான் காஞ்சி தாலுக்கா காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது 17.07.2011 இரவு ரோந்து பணியாக நானும் ரோந்து காவளர்களும் வேடல் கிராமம் அருகே சென்று கொண்டிருந்த போது அதிகாலை 4.30 மணியளவில் 5 நபரகள் வேடல் பெட்ரோல் பங்க் அருகே யேதோ பேசிக்கொண்டிருந்தார் . நாங்கள் அவர்களை பிடித்து விசாரித்தபோது முதல் எதிரி பாலாஜி , 2ம் எதிரி பிரகாஷ், 3ம்எதிரி சரவணன் ஆகியோர் மற்ற 2 எதிரிகள் பஞ்சபாலா மற்றும் மாரியப்பம் ஆகியோர்களின் பெயர்களை கேட்டு தெரிந்துக்கொண்டு அந்த இடத்தில் வருவோர் போவோரிடம் கொள்ளையில் ஈடுபடுவதற்காக பதுங்கி இருந்ததாகவும் இது தொடர்பாக முதல் எதிரி பாலாஜியிடமும் 2ம் எதிரி பிரகாஷ்யிடமும் , 3ம் எதிரி சரவணிடமும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் எதிரி ஆஜர்படுத்திய முக்கால் அடி நீளமுள்ள நீள நிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய ஸ்டீல் கத்தியை சாட்சிகள் மோகன் மற்றும் வீரராகவன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன் . 2ம் எதிரி பிரகாஷ் ஆஜர்படுத்திய முக்கால் அடி நீளமுள்ள கத்தரிப்பூ நிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய ஸ்டீல் கத்தியை சாட்சிகள் மோகன் மற்றும் வீரராகவன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். 3ம் எதிரி சரவணன் ஆஜர்படுத்திய 2 1/2 அடி நீளமும் 2 அங்குலம் அகலமும் கொண்ட சவுக்க உருட்டு கட்டை ஒன்றினை சாட்சிகள் மோகன் மற்றும் வீரராகவன் ஆகியோர்

முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன் . ஒப்புதல் வாக்குமுலங்களை அதே சாட்சிகள் முன்னிலையில் தான் பதிவு செய்தேன். முதல் எதிரியடமிடருந்து கைப்பற்றபட்ட வழக்கு சொத்தின் கைப்பற்றுதல் மகஜர் அ .சா.ஆ.1 ஆகும். 2ம் எதிரியடமிடருந்து கைப்பற்றபட்ட வழக்கு சொத்தின் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். 3ம் எதிரியடமிடருந்து கைப்பற்றபட்ட வழக்கு சொத்தின் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆகும். முதல் எதிரியிடமிருந்து கைப்பற்றிய நீள நிற பிளாஸ்டிக் கைப்பிடிக் கொண்ட கத்தி சா .பொ.1 ஆகும். 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கத்திரிப்பூ பிளாஸ்டிக் கைப்பிடி கொண்ட கத்தி சா.பொ.2, 3ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 2 1/2 அடி நீளம் கொண்ட சவுக்கு கட்டை சா .பொ.3 ஆகும். மேலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேன். அந்த பார்வை மகஜர் அ .சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்பு 1 முதல் 3 எதிரிகளை காவல் நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண்.442/2011 இதச பிரிவு 399ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 1 முதல் 3 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி மேல் விசாரணைக்காக வேண்டி காவல் ஆய்வாளரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.6 ஆகும். நீதிமன்ற காவலுக்கு எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். முதல் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தின் படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகும். 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தின் படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகும். 3ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தின் படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகும். இது தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு வரை சுமார் ஒரு மணி நேரம் கால நேரமாகும். 8 கிலோமீட்டர் தொலைவு உள்ளது. சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு நான் 1 முதல் 3 எதிரிகளோடு சென்ற நேரம் 2 மணி நேரம் கால தாமதம் ஆகி உள்ளது அதற்குரிய காரணம் என்னவென்றால் ரயில்வே கேட் போடப்பட்டிருந்தாலும் போக்குவரத்து நெரிசல் இருந்த காரணத்தினாலும் அந்த கால தாமதம் ஏற்பட்டது. இது தொடர்பாக முதல் தகவல் அறிக்கையில் நான் கால தாமதத்திற்காக காரணத்தை நான் குறிபிட்டு சொல்லியிருந்தேனா என்றால் இல்லை. நான் ரோந்து பணிக்கு செல்லும் பொழுது நிலைய பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டு சென்றிருந்தேனா என்றால் குறிப்பிட்டு தான் சென்றிருந்தேன். ரோந்து பணிக்கு எத்தகை காவல்ளர்களுடன் நான் சென்றேன் என்று குறிபிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் பார்ட்டி சகிதம் என்று சொல்லியுள்ளேன். அதிலாவது அவர்களது பெயர்களை குறிப்பிட்டேனா என்றால் இல்லை. நாங்கள் அனைவரும் ரோந்துபணிக்காக ஜீப்பில் சென்றோம். இந்த விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. 1 முதல் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களையும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தையும் நான்தான் எழுதி தயார் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலங்களில் பதிவு செய்த கையெழுத்தும் பார்வை மகஜரை தயார் செய்த கையெழுத்தும் வெவ்வேறானவை என்றால் சரிஇல்லை. சம்பவ இடத்திற்கு அருகே பெட்ரோல் பங்க் உள்ள காரணத்தினால் அங்குள்ள பணியாளர்கள் யவரையாவது இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட கத்திகளில் கைப்பிடி பகுதி மற்றும்

கூர்கையான பகுதிகளின் நீள அகல விவரங்கள் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டு சொல்லிவில்லை என்றால் சரிதான் . எங்கள் காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காகவும் உயர் அதிகாரிகளின் உத்தரவுற்கு இணங்கவும் பொய்யாக இந்த வழக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல . அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல . எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியில்லை.

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்